RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt23113

OPEN ACCESS

# கவிஞர் கந்தர்வனின் படைப்புகளில் சமுதாயச் சிந்தனைகள்

ச. சிவக்குமார் [அ, *]

[அ] தமிழாய்வுத் துறை, தேசியக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# Social Thoughts in Poet Gandharva's Works

S. Sivakumar [a, *]

[a] Research Department of Tamil, National College, (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620023, Tamil Nadu, India

* Corresponding Author: savasimalarpeyal@gmail.com

Received: 25-05-2022
Revised: 10-10-2022
Accepted: 26-10-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

The way most people live in harmony among themselves is called society. This article deals with the various issues that arise in society and the reactions of Gandharva as a contemporary creator. In addition to referring to how the woman is generally enslaved and positioned below the male, the poet is able to find in his poetic way how the woman should take care to free herself from those slave animals, reacting to such a situation. He has condemned social evils in the strongest terms. He spoke about the problems faced by youth due to unemployment and gave guidelines to overcome the same. He not only questions politics, caste discrimination, corruption, problems faced by farmers, etc. but also proposes some means of solving the problem. The foremost of these is communist thought. It is clear that Gandharva is of the opinion that all will be well only under communist rule.

**Keywords:** Caste Discrimination, Gandharvan, Labour Exploitation, Corruption

## முன்னுரை

படைப்பாளன் தான் வாழ்கிற சமுதாயத்தில் தன் சமகாலத்தில் எழும் பல்வேறு சிக்கல்கள் குறித்து பேசுவதும், அதனைத் தன் படைப்பின் வழி வெளிப்படுத்துவதும் எனத் தன் படைப்பு பணியை மேற்கொள்கிறான். அதனால் தான் படைப்பு என்பது உயிர்ப்பு உடையதாக விளங்குகிறது. அந்தவகையில் கந்தர்வனின் சமுதாய சிந்தனைகள் குறித்து அவரின் கவிதை தொகுதி 'கந்தர்வன் கவிதைகள்' வழி நின்றுக் கட்டுரை ஆய்கிறது.

## சமுதாயம்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் எண்ணங்களாலும் செயல்பாடுகளாலும் வாழ்வியல் முறைகளாலும் ஒன்றுபட்டு வாழும் மக்கள் கூட்டத்திற்கு சமுதாயம் என்று பெயரிட்டு அழைக்கின்றனர். "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு மக்கள் கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பே சமூகம்" என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது (Kalaikalanjiyam, 1956).

கூட்டாக இணைந்து வாழ்கிற மனித சமுதாயத்தில் பல்வேறு சிக்கல்கல் எழுகின்றன. இத்தகைய சூழலில் படைப்பாளன் தான் கேட்ட, பார்த்த, அனுபவித்த சிக்கல்களை தன் படைப்பின் வழி உரைக்கிறான். இலக்கியமும் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய தொடர் சங்கிலிகளாகும்.

“இலக்கியம் மனிதனின் சமுதாய உணர்வு நிலைகளில் ஒன்றாக அமைகிறது. மனிதனை அவனது சமூக உறவு சூழல்களில் பொருத்திப் பார்ப்பது போலவே இலக்கியத்தையும் அதன் விளை நிலமாகிய சமுதாயத்தோடு பொருத்திப் பார்க்கிறது” (Pudhumaipithan, 2012).

பொதுவாக சமூகத்தில் ஏற்படுகிற பிரச்சனைகளை மட்டும் பேசி செல்கிற படைப்பாளர்கள் ஒருபக்கமும் அவ்வாறு பிரச்சனைகளை பேசுவதோடு மட்டுமல்லாமல் அதற்கான தீர்வுகளை, முன்னெடுப்புகளை தன்னுடைய படைப்பின் வழி சொல்லுகிற இலக்கியவாதிகள் ஒரு பக்கமாகவும் இருக்கிறார்கள். இதில் கந்தர்வன் அவர்கள் எவ்வழி சார்ந்தவர் என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## பெண்ணியச் சிந்தனைகள்

‘பெண்ணியம்’ என்பது பெண்களின் நலம் சார்ந்து நிற்பது. ஆண் பெண் வேறுபாடுகள் இன்றி சமூக பொதுமை நோக்கி பயணிப்பது. காலங்காலமாக பெண்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை எதிர்த்துக் கேள்வி கேட்பதோடு, சமூகத்தில் தனக்குரிய இடத்தை அதாவது பெண்ணுக்கு உரிய இடத்தை உறுதிசெய்வது பெண்ணியம் (Muthu Chidambaram, 1995).

“பெண்ணியம் பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான அடக்குமுறைகளையும் எதிர்ப்பதோடு மட்டுமின்றி பெண்ணின் மேம்பாட்டிற்கு உரிய வழிமுறைகளையும் ஆராய்ந்து செயல்படுத்துகிறது” என்று அவர்கள் தன்னுடைய நூலில் பதிவு செய்கிறார் (Muthu Chidambaram, 1995).

கந்தர்வன் ஒரு ஆண் என்றாலும் தன்னுடைய கவிதைகளிலும் சிறுகதைகளிலும் பெண்ணியச் சிந்தனைகளை பதிவு செய்திருக்கிறார்.

பெண்கள் அணியும் அணிகலன்கள் கூட விலங்குகள் தான் என்று ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

“விலங்குகள்

ஆபரணங்கள் ஆகுமா?

ஆகும்

வளையல் கைகளுக்கும்

கொலுசுகள் கால்களுக்கும்

விலங்குகளே” (Gandharvan, 2015)

மற்றோர் இடத்தில்,

“தலையில் பூ விலங்கு

கையில் பொன் விலங்கு

காலில் வெள்ளி விலங்கு

சுவசத் தடைக்கு

மூக்கில் கல் விலங்கு

ஒவ்வொரு மூச்சிலும்

அவள்

விலங்குகளை நுகர்கிறாள்”

எனப் பெண் தன் வாழ் நாள் முழுமையும் ஆண்கள் பூட்டிய அடிமை விலங்கோடு வாழ வேண்டியிருப்பதனை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015).

பெண்களைத் தாயாக வீரத்தின் அடையாளமாகச் சுட்டிக்காட்டினாலும் உண்மையில் அவை வெறும் பேச்சுக்களே.

"தங்கத்தில் சுவர் வைத்து

வைரத்தில் வாசல் வைத்தாலும்

அவள் வைக்கப்பட்ட இடம்

சிறை அல்லவா?"

என்று கந்தர்வன் கேட்கிறார் (Gandharvan, 2015).

சாதிய அடுக்குகளில் எல்லா நிலையிலும் கீழ்நிலையில் பெண் வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதனை,

"மேல்சாதி கீழ்சாதி

எல்லா சாதியிலும்

ஒரு உட்சாதி உண்டு

அதுதான் பெண்சாதி"

என்று கந்தர்வன் குறிப்பிடுகிறார். சாதிய வேறுபாடுகளை விட கொடியது ஆண் பெண் வேறுபாடு என்பது கந்தர்வனின் கருத்தாக அமைகிறது (Gandharvan, 2015).

இவ்வாறான அடக்குமுறைகள் குறித்த கேள்விகளை கேட்காமலேயே பெண்கள் ஏற்றுக்கொண்டு வந்ததனை எண்ணிய கவிஞர்,

"ஆடவும் பாடவும்

கேளிக்கைக்காகவே

நீங்கள் மேடைக்கு வந்தீர்கள்

இப்போதுதான் கோரிக்கைகளுக்கு

வந்திருக்கிறீர்கள்"

என்று பெண்கள் தங்களின் விடியலை நோக்கி தாங்களே முன்னெடுத்து போராட்ட உணர்வினை பெறுகிற நிகழ்வை பாராட்டுகிறார். தங்களுடைய விடுதலைக்காகத் தாங்களே (பெண்களே) முன் நின்று குரல் கொடுக்க வேண்டும் போராட்டங்களை நிகழ்த்த வேண்டும் என்று கந்தர்வன் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015).

## சாதி ஒழிப்புச் சிந்தனை

இந்தியச் சமூகத்தின் மூச்சுக்காற்றை முடக்கிப் போடுகிற ஒன்றாகச் சாதி இருக்கிறது. மனிதனை தனித்தனி கூறுகளாக ஆக்குகிற இந்தச் சாதிய பாகுபாட்டை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடிங்கி எறியவேண்டும் என்ற கருத்துடையவராகக் கந்தர்வன் காணப்படுகிறார்.

"ஏழை யென்றும் அடிமை யென்றும்

எவனும் இல்லை ஜாதியில்

இழிவு கொண்ட மனித ரென்பது

இந்தி யாவில் இல்லையே"

என்று விடுதலை என்பது எல்லோருக்குமானதாக இருக்க வேண்டும் என்று பாரதி பாடி சென்றான் (Bharathiyar, 2019). அவன் கண்ட கனவு நிறைவேறாமல் ஒரு சாரார் மட்டுமே உயர்ந்து

நிற்பதாகக் கருதுகிறார் (Gandharvan, 2015). கீழ் நிலையில் இருப்பவர்கள் இன்னும் கீழேயே இருப்பது கண்டு மனம் வெதும்பிய பாரதி பேசுவதாகக் கந்தர்வன்,

"பாட்டால் அடித்தேன்

பாதகங்கள் குறையவில்லை

இப்போது ஜொட்டால் அடிக்கவா?

சொல்லுங்கள் ஜகத்தீரே!"

என்று வன்சொற்களைப் பதிவு செய்கிறார் (Gandharvan, 2015). 'ஒரு டீயின் விலை' என்ற கவிதையில்,

"பொது கிளாஸில்

டீ கேட்க

தனி கிளாஸில்

டீ கொடுக்க

ஒரு டீயின் விலை

ஒன்பது உயிர்கள் என்று

விலைவாசி

உயர்ந்து கிடக்கிறது"

எனக் கீழவெண்மணி நிகழ்வை குறிப்பிட்டு சாதியின் கோரமுகத்தை அடையாளம் காட்டுகிறார் (Gandharvan, 2015). இறைவனை வணங்குகிற பொருள்களில் கூட வேறுபாடுகள் இருப்பதை,

"பிராமண பூசாரிக்கு மாவிலை வேண்டும்

பண்டாரம் பூசாரிக்கு வேப்பிலை போதும்

அரிசன பூசாரிக்கு அருகம்புல் தான் கிடைக்கும்"

என்று குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). இத்தகைய கொடுமைகளை (சமூகத்தில் விளைகிற சாதியை) அழித்தொழிப்பதற்குப் பெரிதான செயல்பாடுகளை அரசு மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்டும் விதமாக,

"சாதிகளும் மதங்களும் சர்க்காரை எதிர்ப்பதில்லை

சர்க்கார் பதிலுக்கு சாதியை எதிர்க்காது"

என்று குறிப்பிடுகிறார். போலி அரசியலுக்குச் சாதிகள் இருக்கின்றன என்று குற்றம் சாட்டுகிறார் (Gandharvan, 2015).

## வேலைவாய்ப்பின்மை

ஏழை நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் வேலைவாய்ப்பின்மை பெரும் பிரச்சனையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் தற்போது வரை பல லட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பது பல்வேறு பக்க விளைவுகளை, சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதும் நாட்டிற்கு இளைஞர்களின் பங்களிப்பு இல்லாமல் பெரும் பொருளாதார சிக்கல்களை உண்டாக்கும் என்பதும் மனித வளத்தைப் பயன்படுத்த முடியாத சூழலுக்கு நாடு தள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. கவிஞர் கந்தர்வன் 'இல்லை' என்கிற தலைப்பில்,

“உழைப்பவனுக்கு நிலம் இல்லை

உழுபவனுக்கு வேலையில்லை

எங்கள் தேசத்தின் பரப்புக்கும் எல்லையே இல்லை”

என்று வேலையின்மையை வேறு கோணத்தில் பார்க்கிறார் (Gandharvan, 2015).

பெரும் நிலப்பரப்பு, உலகத்தின் இரண்டாம் இடத்தில் மக்கள் தொகை என பல வளங்களை கொண்டிருந்தாலும் ஒரு சிலர் மட்டுமே அதில் பயன் அடைகிறார்கள் என்றும் உண்மையான உழைப்பாளிகள் வேலையில்லாமல் துன்புறுகிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

குறைவான ஊதியத்தில் வேலை ஆட்கள் (ஒப்பந்த கூலிகளாக), ஆட்குறைப்பு திட்டம், பொது நிறுவனங்கள் தனியாரிடம் ஒப்படைப்பு இவ்வாறான செயல்பாடுகளால் இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று கவிஞர் கருதுகிறார்.

“ஒருவேலை இல்லாததால்

ஆணுக்குரிய அத்தனை தகுதிகளையும்

ஒரு சேர நான் இழந்து விட்டேன்”

என்று வேலையில்லாத இளைஞன் பேசுவதாகக் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). ஆண் என்பதால் குறிப்பிட்ட வயதை அடைந்ததும் தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பது சமூக நீதியாக இருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக வேலையில்லா திண்டாட்டம் பெரிதாக இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் தெய்வம் இருக்கும் நமது தேசத்தில் வேலை கொடுக்கும் கடவுள் மட்டும் இல்லை என்று எள்ளல் தொணியில் பேசுகிறார்.

“தெய்வங்கள் நிறைந்த தேசமிது

மழைக்கு வருணன்

நெருப்புக்கு அக்கினி

காற்றுக்கு வாயு

கல்விக்கு சரஸ்வதி

வேலை கொடுக்கும்

தெய்வம் ஒன்றிற்குப்

பஞ்சம் வந்தது”

என்று குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மைக்குக் காரணமாக,

“இளைஞா

உன் வேலை

பாராளுமன்றத்தில்

பதுங்கிக் கிடக்கிறது”

“உன் வேலை

முதலாளிமார்களின்

கறுப்புப் பணங்களில்

ஒளிந்து கொண்டிருக்கிறது”

என்பதனைக் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). வரி கட்டாமல் அரசை ஏமாற்றி சேர்க்கும் கறுப்புப் பணந்தான் வேலை வாய்ப்பின்மைச் சிக்கலுக்கு மூலக்காரணம் எனக் கந்தர்வன் கருதுகிறார்.

## அரசியல் சிந்தனைகள்

மனிதன் கூட்டாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய போதே அரசியல் தொடங்கிவிட்டது. ஒரு தேசத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக அரசியல் தான் இருக்கிறது. மக்களின் அன்றாட வாழ்வியலோடு இரண்டற கலந்து அவர்களின் ஏற்ற இறக்கங்களுக்கு காரணமாக அரசியல் அமைந்திருக்கிறது. ஒருவர் அரசியல் வேண்டாம் என்று ஒதுங்கி நின்றாலும் அது அவரை விட்டு விடாது. விலகி நின்று வேடிக்கை பார்க்க முடியாது. ஏனெனில், அரசியல் என்பது ஒட்டுமொத்த சமுதாயத்தையும் வடிவமைக்க ஒரு சக்தியாக இருக்கிறது

இத்தகைய உயர் நிலை அரசியல் தவறான அரசியல்வாதிகளால் கெட்டுப் போனதாகக் கந்தர்வன் கருதுகிறார்.

“புல் மரம் முளைக்கும்

பூமாலை பூக்கும்

வானம் இங்கு மட்டும்

வில்லாய் வளையும்

மணல் கயிறாய்த் திரியும்”

என்று தேர்தல் நேரத்தில் பொய்யுரைகளால் மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளைக் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015).

அரசியல் என்பது தொண்டு செய்யும் உள்ளத்தோடு இருக்க வேண்டும். மாறாக தன்னலம் மிக்கவர்கள் அரசியலுக்கு வந்த பின்,

“துண்டு என்பது

தோலுக்கு வந்தது

தொண்டு என்பது

காலுக்கு போனது”

என்று மாறி நிற்கும் நிலையைக் கவிஞர் குறிப்பிட்டுக்காட்டுகிறார் (Gandharvan, 2015).

தனக்காக இறைவனிடம் வரங்களைக் கேட்கும் அரசியல்வாதிகள், தனக்கு ஓட்டளித்த மக்களுக்காகப் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் எதுவும் கேட்கவில்லை என்பதனை,

“இங்கும் அந்த

எம்பி வந்தான்

என்னை அனுப்பிய

சனங்கள் யாருக்கும்

ஏதும் வேண்டுமென

இதுவரை வாயைத்

திறக்கவில்லை”

என்று பாராளுமன்றம் பேசுவதாகக் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). பொதுநலம் மறந்து சுயநலத்தோடு தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் சொத்துச் சேர்க்கும் வியாபாரிகளாகச் சில அரசியல்வாதிகள் செயல்படுவதை,

“எதிலும் எப்போதும்

காசை குறி வை

தேசம் முழுவதும்

தீக்கிரை யாயினும்

சாம்பலை விற்று

சம்பாத்திக்கும் நடத்து”

என்ற கவிதையில் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015).

## விவசாயிகள் பற்றிய சிந்தனை

இந்திய தேசத்தின் முதுகெலும்பே விவசாயம் தான்.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்”

என வள்ளுவப்பெருந்தகை உழவர்களின் பெருமை குறித்துப் பேசியுள்ளார் (Parimelalhagar, 2002). அவர்கள்,

“எந்தச் சாயமும்

பூசிக் கொள்ளாத

இவன் விவசாயம்

செய்கிறான்”

என்று விவசாயிகளின் பெருமையைப் பேசுகிறார் (Gandharvan, 2015). உலக உயிர்களுக்கு உணவளிக்கும் உன்னத தொழிலான இந்த விவசாயமும் விவசாயிகளின் நிலையும் இன்று மிகவும் பரிதாபத்துக்குரியதாக இருப்பதைக் காண்கிறோம். பெரும்பான்மையான உழவர்கள்,

“கடன்களால்

கடன்களுக்காக

கடன்களாலேயே என்பது

இவன் வாழ்க்கைத் தத்துவம்”

என வாழ்ந்து வருவதாக குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). மேலும், நாட்டின் பஞ்சத்தைப் போக்குகிற விவசாயி தன் வீட்டின் பஞ்சத்தைப் போக்க இயலாத இன்னலில் இருப்பதை,

“இவனுக்கு எப்போதும்

நீர்ப் பஞ்சம்

நிலப் பஞ்சம்

உரப்பஞ்சம்

வேர்வையும் கண்ணீரும்

எப்போதும் உபரிகள்”

என்ற அடிகளில் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015). மேலும்,

“விதைக்கிறோம் ஆனாலும்

எங்களுக்கு உணவில்லை”

என்று உழைப்பவனுக்கு உணவில்லா நிலையைச் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015).

“கலப்பையில் கட்டிவரும்

மேழியை பாருங்கள்

எங்கள் வாழ்க்கை கேள்விக்குறியாய்

ஆடி ஆடி வருகிறது”

என்ற அடிகள் விவசாயிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாய் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது (Gandharvan, 2015).

“ஒவ்வொரு உழவிலும்

மேடு பள்ளங்களைச் சரிசெய்ய

நாங்கள் ஒரு

நீண்ட சட்டத்தல்

பரம்படிகின்றோம்

தேசம் முழுதுமுள்ள

மேடு பள்ளங்களை

நீண்ட சட்டமோ

சின்ன சட்டமோ

போட்டு சீக்கிரமாகவே

சரிப்படுத்துங்கள்”

என்ற கவிதையின் வாயிலாகச் சமூகத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகளைச் சரிசெய்ய வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015).

கந்தர்வன் அவர்கள் வெறும் கேள்விகளோடு நின்றுவிடாமல்,

“பாட்டாளி ஆட்சியில்தான்

பாரதத்துப் பசி போகும்”

எனக் குறிப்பிடுவதன் காரணமாக உழைப்பாளர்கள் ஆட்சி பொறுப்புக்கு வரும்போது தான் சமுதாயப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும் என்பதனை விடையாகவும் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015).

## ஊழல் மற்றும் உழைப்புச் சுரண்டலுக்கு எதிரானச் சிந்தனைகள்

அரசு தீட்டுகிற திட்டங்கள் மிகச் சரியாக மக்களைச் சென்று சேர்கிற போதுதான் மக்கள் வாழ்வில் முன்னேற்றம் காணமுடியும். நாடும் வளர்ச்சி நிலையை நோக்கி செல்லும். மாறாக, திட்டங்கள் மக்களைச் சென்று சேராமல் இடையிலேயே ஊழல் வாதிகளால் கொள்ளையடிக்கப்படுகிற போது நாட்டின் வளர்ச்சி தடைபடும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மிகப் பெரிய பிரச்சனையாக

இருப்பது ஊழல் தான். இதனை அழித்தொழிக்க வேண்டும் என எல்லோரும் விரும்புகின்றனர். அரசின் உணவுப் பொருள் வழங்கள் கடையில் நடக்கும் உழல் பற்றி,

"ரேசன் கடையில்

வாங்கிக்

கல்லையும் நெல்லையும்

பொறுக்க நினைத்து

அரிசியைப்

பொறுக்கி முடித்தோம்"

என்ற அடிகளில் குறிப்பிடுகிறார் (Gandharvan, 2015). எளிய மக்களுக்குக் குறைவான விலையிலும் இலவசமாகவும் உணவுப் பொருட்கள் கிடைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் ரேசன் கடை அதில் நடக்கும் ஊழல் பற்றி மேற்காண் அடிகளில் குறிப்பிடுகிறார்.

"ஊழல் என்பது

ஒவ்வொரு அணுவிலும்

காவல் என்பது

பயிர்களை மேயும்"

என நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் மலிந்து கிடப்பதனைப் பதிவு செய்கிறார் (Gandharvan, 2015). ஊழலால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதனை,

"தேவை என்பது

தெருக்களில் திரியும்

திரவியம் எல்லாம்

கடைகளில் பதுங்கும்"

என்ற அடிகளில் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015). மக்களுக்குச் சென்று சேரவேண்டியவை பதுக்கல் காரர்களால் பதுக்கப்படுவதனால் ஏற்படுகிற பிரச்சனையினைக் குறிப்பிடுகிறார். பதவி வழி படிநிலையாய் ஊழல் நடப்பதை,

"எம். எல். ஏ. சட்டையில்

சில பைகள் தைத்தார்

எம். பி. சட்டையில்

ஏராளம் பை தைத்தார்

மந்திரி பையையே

சட்டையாய்

மாட்டிக் கொண்டார்"

எனச் சுட்டிக்காட்டுகிறார் (Gandharvan, 2015). நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு விடுதலை பெற்ற பின்பு என்ற அடிப்படையில், சுதந்திரத்திற்கு முன்னால் சுதந்திரம் என் பிறப்புரிமை சுதந்திரத்திற்குப் பின்னால் சுரண்டல் என் பிறப்புரிமை என நாட்டின் நிலையை முன்னும் பின்னுமாக ஒப்பிட்டு பேசுகிறார்.

## முடிவுரை

கந்தர்வன் பொதுவுடமைச் சிந்தனை கொண்டவர் என்பதனால் சமுதாயத்தின் அனைத்து சிக்கல்களுக்கும் தீர்வாகப் பொதுவுடைமை கொள்கையையே முன்வைக்கிறார். புரட்சியை வரவேற்கும் கந்தர்வன், இளைஞர்கள் சமூக அக்கறை உடையவர்களாகவும் பொதுவுடைமை சிந்தனை கொண்டவர்களாகவும் வரவேண்டும் என விரும்பக்கூடியவராகக் காணப்படுகிறார்.

## References

Bharathiyar, (1992) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Gandharvan, (2015) Gandharvan Kavithaikal, Bharathi Puthagalayam, Chennai, India.

Kalaikalanjiyam, (1956) Thoguthi Naangu, Tamil Valarchi Kazhagam, Chennai, India.

Muthu Chidambaram, S., (1995) Penniyam thotramum valarachiyum, Puthagalayam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Pudhumaipithan, (2012) Tamil Sirukadhaikalin Samakaala Solnerikal, Karuththupattarai, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License